بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

ஈமானும் ஒரு செடியாகும். நற்செயல்கள் மூலமாக அதற்கு தண்ணீர் பாய்ச்சப்படுகின்றது. எனவே தான் ஈமான் முழுமையடைவதற்கு நற்செயல்கள் மிக மிக அவசியமானதாகும். ஈமானோடு நற்செயல்கள் இல்லாமல் இருக்குமென்றால் செடி காய்ந்து விடும். மேலும் அவர்கள் இழப்பிற்குரியவர்களாக ஆகிவிடுவார்கள். பொறுமை, துஆ மற்றும் தன்னுடைய நற்செயல்களுடன் அல்லாஹ்வின் அருட்களை ஈர்க்கக் கூடியவர்களாக ஆகுங்கள். கஷ்டங்கள் வரும் போதெல்லாம் நீங்கள் اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ கூறக்கூடியவர்களோடு இணைந்து விடுங்கள்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 2.10.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

وَلَنَبۡلُوَنَّکُمۡ بِشَیۡءٍ مِّنَ الۡخَوۡفِ وَالۡجُوۡعِ وَنَقۡصٍ مِّنَ الۡاَمۡوَالِ وَالۡاَنۡفُسِ وَالثَّمَرٰتِ ؕ وَبَشِّرِ الصّٰبِرِیۡنَ ﴿۱۵۶﴾ الَّذِیۡنَ اِذَاۤ اَصَابَتۡہُمۡ مُّصِیۡبَۃٌ ۙ قَالُوۡۤا اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

இந்த வசனங்களின் பொருள் இதுவாகும். ஓரளவு பயத்தாலும், பசியாலும், செல்வம், உயிர்கள், கனி வகைகள் ஆகியவற்றின் இழப்பாலும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். (தூதரே !) பொறுமையாளர்களுக்கு நீர் நற்செய்தியைக் கூறுவீராக. (2:156,157)

இந்த வசனங்களில் நம்பிக்கையாளர்களுக்கு இன்னல்களும், கஷ்டங்களும் அல்லது வேறு ஏதேனும் வகையிலான இழப்பு ஏற்படும் போது அவர்கள் வெளிப்படுத்தும் சிறப்பம்சங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அல்லது இதுபோன்ற சிறப்பம்சங்களை கொண்டிருக்கும் போது தான் ஒரு உண்மையான நம்பிக்கையாளரைப் பற்றி தெரிய வருகின்றது என்று அல்லாஹ் கூறுகின்றான். நம்பிக்யைாளர்களுக்கு சில வேளைகளில் தனிப்பட்ட அளவில் இழப்புகளை சந்திக்க நேரிடுகின்றது. சில வேளைகளில் ஜமாஅத் அளவில் இழப்புகள் ஏற்படுகின்றது. ஆனால் ஒரு உண்மையான நம்பிக்கையாளர் எல்லா வகையான இழப்புகளின் போதும் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற்று வெற்றியுடன் வெளி வருகிறார். மேலும் அவர் அவ்வாறு வெளி வரவும் வேண்டும். இந்த கருத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல்வேறு மேற்கோள்களிலும் கூற்றுக்களிலும் மிகவும் விளக்கமாக வெளிச்சமூட்டியிருக்கின்றார்கள். பல்வேறு கோணங்களில் இந்த கருத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த வசனங்களுக்கு விளக்கமளித்தவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: கஷ்டங்களை தீயதாக கருதக் கூடாது. ஏனென்றால் கஷ்டங்களை தீயதாக கருதக்கூடியவர் நம்பிக்கையாளராக இருப்பதில்லை. அல்லாஹ் கூறுகின்றான். இதே கஷ்டம் தூதர்களின் மீது வரும் போது அது அவர்களுக்கு அருட்களின் நற்செய்தியை வழங்குகின்றது. மேலும் இதே கஷ்டம் தீயவர்கள் மீது வரும் போது அவர்களை அழித்து விடுகின்றது. சுருக்கமாக, கஷ்டத்தின் போது காலு இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன் என்று கூற வேண்டும். இறைவனுடைய விருப்பத்தை நாட வேண்டும்.

கூறினார்கள்: நம்பிக்கையாளரின் வாழ்க்கையில் இரு பகுதிகள் உள்ளன. நம்பிக்கையாளர் செய்கின்ற நற்செயல்களுக்கு நற்கூலிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பொறுமை எப்படிப்பட்ட ஒன்றென்றால் அதற்குரிய கூலி அளவற்றதும் எல்லையற்றதும் ஆகும். இறைவன் கூறுகின்றான். இவர்களே பொறுமையாளர்கள் ஆவர். இவர்களே இறைவனைப் புரிந்து கொண்டுள்ளார்கள். எவர்கள் பொறுமையினுடைய பொருளை புரிகின்றார்களோ அவர்களினுடைய வாழ்க்கையை இறைவன் இரு பகுதிகளாக பிரிக்கின்றான். முதலாவது, அவர் அதாவது பொறுமையை மேற்கொள்பவர் துஆ செய்யும் போது இறைவன் அதை ஏற்றுக் கொள்கின்றான். உத்ஊனி அஸ்தஜ்புலகும் என்றும் உஜீபு தஃவதத் தாயி இதா தஆன் என்றும் கூறுகின்றான். சில சமயம் நம்பிக்கையாளரை தன்னுடைய பேச்சை கேட்க வைக்கின்றான். கூறுகின்றான். وَلَنَبۡلُوَنَّکُمۡ بِشَیۡءٍ

பிறகு அன்னார் கூறினார்கள்: அல்லாஹ்வின் நேசத்திற்குரியவர்களுக்கு பாவத்தின் காரணமாக கஷ்டங்கள் ஏற்படுவதில்லை. அதாவது பாவங்கள் மூலமாக கஷ்டங்கள் வருவதில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: கஷ்டங்களினால் தான் நம்பிக்கையாளரின் சிறப்புகள் வெளிப்படுகின்றன. பெருமானார் (ஸல்) அவர்களினுடைய துக்கம் மற்றும் உதவிகள் வழங்கப்பட்ட காலங்களை பாருங்கள். அன்னாருடை ஒழுக்கம் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படாமல் இருந்திருந்தால் இப்போது நாம் அவர்களின் நல்லொழுக்கம் பற்றி என்ன கூறுவோம் ? நம்பிக்கையாளருடைய கஷ்டங்களை பிறர் கஷ்டமாக கருதலாம். ஆனால், நம்பிக்கையாளர் அதை கஷ்டங்களாக கருதுவதில்லை.

கூறினார்கள்: மனிதன் தனது உண்மையான பாவமன்னிப்பு கோருதலில் நிலைத்திருக்க வேண்டும் என்பது அவசியமானதாகும். மேலும் பாவமன்னிப்பு கோருதலின் மூலமாக அவனுக்கு ஒரு புதிய வாழ்க்கை கிடைக்கின்றது. பாவமன்னிப்பு கோருதலின் கனிகளை பெற விரும்புகின்றீர்கள் என்றால் நற்செயல்களுடன் பாவமன்னிப்பு கோருதலை பூர்த்தி செய்யுங்கள். இதே போல் ஈமானும் ஒரு செடியாகும். நற்செயல்கள் மூலமாக அதற்கு தண்ணீர் பாய்ச்சப்படுகின்றது. எனவே தான் ஈமான் முழுமையடைவதற்கு நற்செயல்கள் மிக மிக அவசியமானதாகும். ஈமானோடு நற்செயல்கள் இல்லாமல் இருக்குமென்றால் செடி காய்ந்து விடும். மேலும் அவர்கள் இழப்பிற்குரியவர்களாக ஆகிவிடுவார்கள்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: நீங்கள் நம்பிக்கையாளரின் நிலையில் இருக்கும் போது சோதனைகளை தீயதாக கருதாதீர்கள். எவர் முழுமையான நம்பிக்கையாளர் இல்லையோ அவர் தான் அவ்வாறு கருதுவார். திருக்குர்ஆன் கூறுகிறது. அல்லாஹ் கூறுகின்றான். சில வேளை உங்களை பொருளைக் கொண்டும், உயிரைக் கொண்டும், குழந்தைகளைக் கொண்டும் அல்லது விளை நிலங்கள் போன்றவற்றின் இழப்பைக் கொண்டும் சோதித்துக் கொண்டிருப்போம். ஆனால் அப்படிப்பட்ட தருணங்களில் பொறுமையை கையாளுகின்றவர்களுக்கும், நன்றியுடையவர்களாக இருக்கின்றவர்களுக்கும் அல்லாஹ்வினுடைய கருணையின் வாயில் பரந்ததாகவும் மேலும் அவர்களின் மீது இறைவனுடைய அருட்கள் இருக்கும் மேலும் அப்படிப்பட்ட நேரங்களில் اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَیْهِ رَاجِعُوْنَ என்று கூறக்கூடியவர்களுக்கும நற்செய்தி வழங்குவீராக என்கின்றான். அதாவது நாம் மற்றும் நம் தொடர்பான அனைத்து பொருட்களும் இறைவனிடமிருந்தே உள்ளது. இறுதியில் இவை அனைத்தும் இறைவன் பக்கம் திரும்பிச் செல்லவும் வேண்டியிருக்கின்றது. எவ்வித இழப்பின் துக்கமும் அவர்களின் உள்ளத்தை துன்புறுத்துவதில்லை. அவர்கள் இறை விருப்பத்தின் இல்லத்தில் இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட மக்கள் பொறுமையாளர்களாக இருக்கின்றார்கள். பொறுமையாளர்களுக்கு அல்லாஹ் அளவற்ற நற்கூலிகளை வைத்துள்ளான்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: அவன் எங்களுடைய துஆக்களை ஏற்றுக் கொள்வதில்லை என்று சிலர் அல்லாஹ்வின் மீது குற்றம் சாட்டுகின்றனர். அல்லது இறை நேசர்களை குற்றம் சாட்டுகின்றனர். அதாவது இன்ன துஆ ஏற்றுக் கொள்ளப்படவில்லை என அவர்களை அதாவது இறை நேசர்களை ஏளனத்திற்கு ஆளாக்குகின்றனர்.

அன்னார் கூறினார்கள்: உண்மையில் அந்த அறிவீனர் இறை சட்டத்தை முற்றிலும் அறியாதவராக இருக்கின்றார். எந்த மனிதனுக்கு இறைவனோடு இது போன்ற விவகாரங்கள் ஏற்பட்டிருக்குமோ அவன் நன்கு அறிந்திருப்பான். அல்லாஹ் ஏற்றுக் கொள்வதற்கும் ஏற்றுக் கொள்ள வைப்பதற்கும் இரண்டு உதாரணங்களை எடுத்துக் கூறியிருக்கின்றான். இவற்றை ஏற்றுக் கொள்வதே ஈமான் ஆகும். நீங்கள் ஒரு பக்கம் மட்டும் அழுத்தம் கொடுக்கக் கூடியவராக இருக்காதீர்கள். நீங்கள் இறைவனை எதிர்த்து அவனால் நியமிக்கப்பட்ட விதிகளை முறிப்பதற்கு முயற்சி செய்யாதீர்கள்.

அன்னார் கூறினார்கள்: மனிதனுக்கு முன்னேற இரண்டே வழிகள் உள்ளன. முதலாவது, மனிதன் ஷரீஅத் ரீதியிலான அடிப்படை கட்டளைகள் அதாவது தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் போன்ற கட்டளைகள் பேணுவது இறைவனுடைய கட்டளைகளை தானே நிறைவேற்றுகின்றான். ஆனால் இந்த விஷயங்கள் மனிதனுடைய கைகளில் இருக்கின்றது. இதன் காரணமாக இவற்றில் சில சமயம் சோம்பல் ஏற்பட்டு விடுகின்றது. மேலும் சில வேளைகளில் எளிமையான மற்றும் வசதியான நிலைமைகளையும் ஏற்படுத்திக் கொள்கின்றான். எனவே தான் அல்லாஹ் மனிதன் முழுமையடைவதற்கு இன்னொரு வழியை வைத்துள்ளான். அதாவது நாம் உங்களை சில வேளைகளில் ஓரளவு அச்சத்தை கொண்டும், சில வேளைகளில் பசியைக் கொண்டும், சில வேளைகளில் பொருள், உயிர் மற்றும் பழங்களின் இழப்பைக் கொண்டும் சோதித்துக் கொண்டிருப்போம். ஆனால் இந்த இன்னல்கள் மற்றும் கஷ்டங்களிலும் பசி, பட்டினியிலும் பொறுமையை மேற்கொண்டு اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَیْهِ رَاجِعُوْنَ என்று கூறக்கூடியவர்களுக்கு மிகப்பெரும் பெரும் நற்கூலிகள் மற்றும் அவனுடைய குறிப்பான அருட்கள் உள்ளன என நற்செய்தி கூறுவீராக என்கின்றான்.

ஆக, அல்லாஹ் நம்மை ஏன் பெரிய பெரிய இழப்புகளை சந்திக்க வைக்கின்றான் என்கின்ற எண்ணம் நம்முடைய உள்ளங்களிலும் எழுக்கூடாது. மேலும் எந்தவொரு எதிரி எள்ளிநகையாடுவதினாலும், அல்லது அல்லாஹ் உங்களோடு இருக்கின்றான் என்றால் பிறகு ஏன் உங்களுக்கு இழப்புகள் ஏற்படுகின்றன ? என்று கூறுவதினாலும் நாம் குழம்பி விடக்கூடாது என்பதையும் நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். இந்த மேற்கோள்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்முன் எடுத்து வைத்திருக்கின்ற விஷயங்களிலிருந்து ஒரு சில முக்கியமான கருத்துக்களை மீண்டும் உங்கள் முன் வைக்கின்றேன்.

அன்னார் கூறினார்கள்: கஷ்டங்களும் இன்னல்களும் தூதர்களின் மீதும் அல்லது அல்லாஹ்வின் நேசத்திற்குரியவர்களின் மீது வரும் போது மேலும் சரியான போதனைகளின்படி செயல்படக்கூடிய நபிமார்களினுடைய ஜமாஅத்தின் மீதும் வரும் போதும் எவ்வாறிருப்பினும் அல்லாஹ்விற்கு நேசமானவர்கள் கஷ்டங்களை எதிர்கொள்ளும் போது அல்லாஹ் அவர்களை ஏதேனும் கஷ்டத்தில் ஆழ்த்துவதற்காகவோ அல்லது தண்டனை வழங்குவதற்காகவோ அவர்களை கஷ்டங்களை எதிர்கொள்ள வைப்பதில்லை. மாறாக, அவர்களுக்கு அருட்களின் நற்செய்தியை வழங்குகின்றான். இதுபோன்ற கஷ்டங்கள் இறைவனுடைய தூதர்கள் மற்றும் அவர்களினுடைய ஜமாஅத்தின் எதிரிகளின் மீது வரும்போது மேலும் தீயவர்களின் மீது வரும்போது அது அழிவாக வருகின்றது. மேலும் அது அவர்களை அழித்து விடுகின்றது.

பிறகு அன்னார் கூறினார்கள்: கஷ்டங்களின் போது பொறுமையை கையாளுபவர்கள் இறைவனின் அளவற்ற நற்கூலிக்கு தகுதியானவராக ஆகிவிடுகின்றனர். ஆக, ஒரு நம்பிக்கையாளர் பொறுமையின் கருத்தை புரிய வேண்டிய தேவை இருக்கின்றது. மனிதன் ஏதேனும் இழப்பின் போது கவலை கொள்ளாமல் இருப்பது என்பது பொறுமையல்ல. மாறாக, ஏதேனும் இழப்பு மற்றும் கஷ்டத்தை சுய உணர்வுகளை இழக்கக்கூடிய அளவிற்கு தன்மீது போட்டுக் கொள்ளக்கூடாது. மேலும் கவலையடைந்து அமர்ந்து விடக்கூடாது. மேலும் தன்னுடைய செயல் ஆற்றலை பயன்படுத்தாமல் இருக்கக்கூடாது என்பதே இதன் பொருளாகும். ஓரளவுக்கு வருத்தம் கொள்வது சரிதான். ஏதேனும் இழப்பின் போது வருத்தம் இருக்கவும் வேண்டும். ஆனால் அத்தோடு ஒரு புதிய உறுதியுடன் அடுத்த இலக்கை நோக்கி அடியெடுத்து வைப்பதில் முன்பை விட அதிகமாக முயற்சியில் உறுதியும், செயலின் தேவையும் உள்ளது. பிறகு இதையும் நினைவில் கொள்ள வேண்டும். பொறுமையை மேற்கொள்ளக் கூடியவர்களுக்கே துஆவின் உண்மையும் தெரிந்திருக்கும். சில வேளைகளில் அல்லாஹ் உடனடியாக துஆக்களை ஏற்றுக் கொள்கின்றான். சில சமயம் அல்லாஹ் சில காரணங்களால் துஆக்களை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால், ஒரு நம்பிக்கையாளரின் பணி என்னவென்றால் எந்நிலையிலும் அல்லாஹ்வின் விருப்பத்தோடு பொருந்தி இருக்க வேண்டும். மேலும் அல்லாஹ்வினுடைய எந்தவொரு செயலிலும்

முறையீடு செய்யக்கூடாது. இதுவே உண்மையான பொறுமையாகும். இதுபோன்ற பொறுமையின் நிலை இருக்குமென்றால் அல்லாஹ் தன்னுடைய அடியார்களுக்கு அதிகமாக வழங்குகின்றான். அருட்களை கொடுக்கின்றான்.

அன்னார் கூறினார்கள்: அல்லாஹ்வினுடைய உண்மையான அடியார்கள் கஷ்டமான நேரத்திலும் இன்பத்தை அடைந்து கொண்டிருப்பார்கள். ஏனென்றால் இந்த கஷ்டங்களுக்கு பின்னும் அல்லாஹ்வினுடைய அளவற்ற அருட்கள் இருக்கின்றன என்பது அவர்களுக்கு தெரிந்து கொண்டிருக்கும்.

அன்னார் கூறினார்கள்: நம்பிக்கையளார்களுக்கு இன்னல்களும், கஷ்டங்களும் அவர்களுடைய பாவங்களால் வருவதில்லை. மாறாக, அல்லாஹ்வின் தரப்பிலிருந்து ஒரு சோதனையாகும். இறைவனுடைய அடியார்கள் எந்நிலையிலும் அல்லாஹ்வின் விருப்பத்தோடு பொருந்தியவர்களாக இருக்கின்றார்கள் என்பது உலகிற்கும் தெரிய வேண்டும் என்பதற்காகும்.

அன்னார் கூறினார்கள்: உலகில் பெருமானார் (ஸல்) அவர்களே இறைவனுக்கு மிகவும் அன்பிற்குரியவர்களாக இருந்தார்கள். ஆனால் அன்னாருக்கும் ஏராளமான கஷ்டங்கள் ஏற்பட்டன. மாறாக, தனிப்பட்ட கஷ்டங்களும் வந்தன. ஜமாஅத் அளவிலான கஷ்டங்களும் வந்தன. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தைப் போன்று வேறு எவருக்கும் ஏற்படவில்லை. ஆனால் எல்லாவகையான கஷ்டத்திலும் அன்னாரின் பொறுமை, இறை விருப்பத்தில் பொருந்தியிருக்கக்கூடிய முன்மாதிரி உலகில் வேறு எங்கும் நமக்கு தென்படவில்லை. இது எப்படிப்பட்ட உயர் நல்லொழுக்கம் என்றால் அனைத்து முஸ்லிம்களுக்கும் அழகிய முன்மாதிரியாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மை உண்மையான பாவ மன்னிப்பு கோருதலின் பக்கம் கவனமூட்டியவாறு கூறுகின்றார்கள்: இதுவும் உங்களுடைய வெற்றிக்கும் மேலும் சோதனைகளிலிருந்து சிறந்த முறையில் வெளிவருவதற்கும் மிகவும் அவசியமானதாகும்.

ஆக, நற்செயல்களோடு பாவமன்னிப்பு கோருதலின் பக்கம் கவனம் செலுத்துவதும் நம்பிக்கையாளரின் பணியாகும். அதாவது, எல்லா கஷ்டம் மற்றும் சோதனையின் போது இறைவன் முன் குனிந்து தன்னுடைய பலகீனத்தை ஒப்புக் கொள்ள வேண்டும். பிறகு நற்செயல்களைக் கொண்டு தனது சீர்திருத்தத்தை தொடர வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: எவ்வாறு ஒரு தோட்டக்காரன் செடியை நட்டி பிறகு அதற்கு தண்ணீர் ஊற்றுகிறான். அதை வளர்க்கிறான். பாத்தியிடுகின்றான். இதே போன்று நம்பிக்கையாளர்களும் ஈமானின் செடிக்கு நற்செயல் என்ற தண்ணீரை ஊற்ற வேண்டும். இவ்வாறு செய்தால் இதுவே ஒரு நம்பிக்கையாளரின் வெற்றிக்கு காரணமாகி விடுகின்றது.

அன்னார் கூறினார்கள்: மக்களின் பேச்சைக் கேட்டு குழப்பமடைய வேண்டிய தேவையில்லை. நிறைய பேர் பேசுகிறார்கள். மக்கள் இறை நேசர்களின் மீதும், அவர்களுடைய இன்னென்ன துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என ஆட்சேபனை செய்து வந்துள்ளார்கள்.

அன்னார் கூறினார்கள்: இவ்வாறு ஆட்சேபனை செய்யக்கூடியவர்கள் உண்மையில் இறைவனின் சட்டத்தை அறியாதவர்களாக இருக்கின்றார்கள். அல்லாஹ் சில வேளைகளில் ஏற்றுக் கொள்கிறான். சில வேளைகளில் ஏற்றுக் கொள்ள வைக்கிறான். இதுதான் அவனது சட்டமாகும் என்பதை ஒரு நம்பிக்கையாளர் அறிந்துள்ளார். நீங்கள் அந்த சட்டத்தை மீறக் கூடியவர்களாக ஆகிவிடாதீர்கள் என அன்னார் நமக்கு அறிவுறுத்தியுள்ளார்கள்.

அன்னார் கூறுகிறார்கள்: நம்பிக்கையார்கள் மீது எப்போதும் கஷ்டங்களும் துன்பங்களும் இருப்பதில்லை. வருகின்றன. செல்கின்றன. ஆக, பொறுமை, துஆ மற்றும் தன்னுடைய நற்செயல்களுடன் அல்லாஹ்வின் அருட்களை ஈர்க்கக் கூடியவர்களாக ஆகுங்கள். கஷ்டங்கள் வரும் போதெல்லாம் நீங்கள் إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ என்று கூறக்கூடியவர்களோடு இணைந்து விடுங்கள். கடந்த நாட்களில் இங்கு பள்ளியை ஒட்டியுள்ள இரண்டு ஹால்களிலும் தீயின் காரணமாக பெரும் இழப்பு ஏற்பட்டது. மிகவும் அபாயகரமான நெருப்பாக இருந்தது. இதைப் பற்றி பல்வேறு டி.வி சேனல்களிலும், மீடியாக்களும் செய்தி வெளியிட்ட போது ஒரு சில அதிக காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினர். பள்ளிவாயில் எரிந்து விட்டது என்பதற்காக வருந்தவில்லை. மாறாக, இவர்களினுடைய இரண்டு ஹால்கள் மட்டுமே எரிந்திருக்கிறது. பள்ளிவாயில் ஏன் எரியவில்லை என்று வருந்தினர். ஆனால், அனைவரும் இது போன்றவர்கள் அல்ல. சில இடங்களிலிருந்து முஸ்லிம்கள் நம்மீது கருணையை வெளிப்படுத்தினார்கள்.

ஆக, இந்த சம்பவம் உலகில் ஜமாஅத்தைப் பற்றிய ஒரு பரந்த அறிமுகத்தை ஏற்படுத்தியுள்ளது. நமக்கு வருத்தம் ஏற்பட்டது. நாம் பொறுமையையும் மேற்கொண்டோம். إِنَّا لِلَّهِ என்றும் கூறினோம். ஆனால் அல்லாஹ் இந்த இழப்பு மற்றும் சோதனையிலும் ஜமாஅத்திற்கு சாதகமாக மக்களை நிறுத்தி நான் இவர்களோடு இருக்கின்றேன் என்று உலகிற்கு கூறி விட்டான். தீ ஏற்பட என்ன காரணம் என்பது இப்போது வரை காவல் துறைக்கும் தெரிய வரவில்லை. அவர்கள் ஒன்றும் கூறவில்லை. எவ்வாறிருப்பினும் என்ன காரணமாக இருந்தாலும் இந்த சம்பவம் இந்த பள்ளியின் ஏற்பாட்டாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் பலகீனத்தையும் சுட்டிக் காட்டுகின்றது. அவர்களும் பாவமன்னிப்பு கோருவது அவசியமாகும். அதிகமதிகமாக இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். ஒரு பக்கம் ஒரு சில முஸ்லிம்கள் சந்தோஷத்தை கொண்டாடக்கூடிய மற்றும் சுப்ஹானல்லா என்றும் கூறும் நடைமுறை உள்ளது. இருக்கட்டும். இன்று இந்த சுப்ஹானல்லாஹ்வை பரிகாசம் செய்யும் விதத்திலும் அல்லாஹ்வின் தன்மான உணர்வை தூண்டக்கூடிய வகையிலும் கூறுகின்றனர். ஆனால் விரைவிலேயே இதைவிட சிறந்த மற்றும் அழகிய முறையில் கட்டி முடித்து நாம் உண்மையான சுப்ஹானல்லாஹ்வை கூறுவோம். மேலும் மாஷா அல்லாஹ்வையும் கூறுவோம்.

நான் கூறியது போன்று சோதிக்கப்படுவது அல்லாஹ்வின் நடைமுறையாகும். இதற்கு என்ன காரணம் ? எவ்வாறு இவை அனைத்தும் நடந்தன ? இது ஏதேனும் சூழ்ச்சியோ, தீங்கு விளைவித்தலாகவோ இருந்தால் இதுபோன்ற விஷயங்களால் ஜமாஅத்தினுடைய முன்னேற்றங்கள் தடை பெற முடியாது. நான் கூறியது போன்று ஏற்பாட்டாளர்களுக்கு தங்களது பலவீனங்களை காணவும், அதைப்பற்றி ஆராயவும் இந்த சம்பவம் விழிப்பூட்டக்கூடியதாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாதம் செய்ததிலிருந்தே சூழ்ச்சிகளும், நெருப்பை மூட்டுதலின் தொடர் இருந்து வருகின்றது. ஆனால் என்ன முடிவு எட்டுகிறது ? அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றமே நமக்கு எல்லா இடங்களிலும் தென்படுகின்றது. ஒரு தீ வெளிப்படையான தீயாகும். ஆனால், இன்னொரு நெருப்பு மனிதனுடைய பொறாமை, காழ்ப்புணர்ச்சியின் நெருப்பாகும். வெளிப்படையாக நம்முடைய பள்ளியோடு ஒட்டியுள்ள ஒரு பகுதியில் தீ பிடித்தது. ஆனால் நான் கூறியது போன்று நம்முடைய இந்த இழப்பு இன்ஷா அல்லாஹ் சரியாகி விடும். மேலும் இன்ஷா அல்லாஹ் நாம் அல்லாஹ்வின் நற்செய்தியிலிருந்து பங்கை பெறக் கூடியவர்களாகவும் ஆவோம். இந்த பொறுமை மற்றும் துஆ நம்மை அல்லாஹ்வினுடைய குளுமை மற்றும் குளிர்ந்த நிழலின் மடியில் எடுத்துக் கொள்ளும். ஆனால் இந்த வெளிப்படையான நெருப்பினாலும் எதிரிகளின் பொறாமையின் நெருப்பு அதிகமாகி விட்டது.

ஆக, நமக்கு எதிராக மூட்டப்பட்ட வெளிப்படையான நெருப்பும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எதிரிகளை எரித்துக் கொண்டிருக்கின்றது. M.T.A வினுடைய ஏற்பாட்டின் ஒரு பகுதி இங்குள்ளது. மாறாக, மிகப்பெரிய பகுதி இங்கு தான் உள்ளது. அன்றைய தினம் ராஹே ஹுதாவின் நேரடி நிகழ்ச்சி இருந்தது. நிகழ்ச்சியின் தயாரிப்பாளர்கள் M.T.A வின் Studio வரை சென்றடைவது கஷ்டம். அங்கு என்ன நிலைமை உள்ளதோ. அங்கு செல்ல முடியாது. இன்று நிகழ்ச்சியில் Recording ஐ காட்டலாம். Transmission ல் Live Program ஐ காட்ட வேண்டாம் என முடிவெடுத்தனர். எனக்கு தெரிய வந்த போது மஸ்ஜிது ஃபஸலில் இருந்து நேரடி நிகழ்ச்சி நடைபெறும். இதை நிறுத்த வேண்டிய எவ்வித தேவையும் இல்லை என்று கூறினேன். இதுபோன்ற முடிவுகளை அவர்கள் என்னிடம் கேட்காமல் எடுத்திருக்கவும் கூடாது. உடனடினயாக அவர்கள் Live Program ஐ என்ன செய்ய வேண்டும் என என்னிடம் கேட்டிருக்க வேண்டும். உடனடியாக முடிவெடுக்க முடியாமல் இவர்களுடைய அவநம்பிக்கையினால் இவர்களின் இதுபோன்ற எண்ணத்தால் Live Program நடக்காமல் இருந்திருந்தால் இது அஹ்மதிகளுக்கும் உலகிற்கும் எங்களுடைய அனைத்து அமைப்பும் இந்த சம்பவத்தில் சீர்குலைந்து விட்டது என்ற தூதுச் செய்தியை வழங்குவதாக இருந்திருக்கும். அவ்வாறு நடக்கவில்லை.

எவ்வாறிருப்பனும் இது போன்ற விஷயங்களால் நமக்கு எவ்வித அச்சமும் ஏற்படவில்லை. ஏற்படவும் கூடாது. இந்த சம்பவமும் ஒரு சோதனையாக இருக்குமென்றால் நாம் நம்முடைய செயலால் அல்லாஹ்வின் முன் குனிந்தவாறு துஆக்கள் செய்தவாறு இந்த சோதனையிலிருந்தும் வெற்றியுடன் வெளி வருவோம் என்ற உறுதி கொள்ள வேண்டும். பொருளாதார அளவிலும் ஜமாஅத்தின் மீது அல்லாஹ் அருள் செய்துள்ளான். இன்ஷா அல்லாஹ் இந்த இழப்பு சிறந்த முறையில் சரி செய்யப்படும். இந்த இழப்பு எப்படி ஏற்பட்டிருந்தாலும், யார் ஏற்படுத்தி இருந்ததாலும் நம்முடைய தகுதியின்மையால் நடந்துள்ளது.கவனக்குறைவால் நடந்துள்ளது. அல்லது தற்செயலாக நடந்துள்ளது. இதன் காரணம் என்னவாக இருந்தாலும் இன்ஷா அல்லாஹ் இதை நாம் அல்லாஹ்வின் அருளால் மீண்டும் அழகிய வடிவில் திரும்பி கொண்டு வர வேண்டும். தற்சமயம் இதற்கென்று நான் இதற்காக தனியாக ஒரு திட்டத்தை அறிவிக்க வேண்டும் என்கின்ற தேவை இல்லை. ஆனால் மக்கள் கூறாமலேயே இதற்காக பணத்தை அனுப்ப ஆரம்பித்து விட்டார்கள். குழந்தைகள் இதற்காக குறிப்பாக சந்தா கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள். கூறாமலேயே குழந்தைகள் தமது முழு உண்டியலையும் அதில் எவ்வளவு காசுகள் சேர்த்து வைத்திருந்தார்களோ அனைத்தையும் வழங்கி விட்டார்கள்.

7,8 வயதுடைய ஒரு சிறுமி தனது தந்தையிடம் இந்த விஷயத்தை கேட்டு விட்டு நாம் அந்த ஹாலுக்கு சென்று சாப்பிட்டுள்ளோம்.விளையாடியும் வந்துள்ளோம். நிகழ்ச்சிகளும் நடத்தி வந்துள்ளோம். அதை மீண்டும் கட்டுவதில் நாம் நமது பங்களிப்பைம் செலுத்த வேண்டும் எனக் கூறினாள். இது ஒரு சிறுமியின் உணர்வுகளாகும். எனவே, நான் எவ்வளவு சேர்த்து வைத்துள்ளேனோ அதை தருகிறேன் என்று கூறி தனது உண்டியலை கொண்டு வந்தாள். ஆக, சமுதயாத்தில் குழந்தைகளும் இது போன்ற உணர்வுகளை கொண்டிருக்கும் போது வேறு யார் அவர்களை கவலை அடைய செய்ய முடியும். இந்த இழப்புகள் அவர்களை என்ன செய்யும்.

ஆனால் அல்லாஹ் அற்புதமான முறையில் அவர்களை காப்பாற்றினான். இவர்களுக்கு இதுவும் மிகப்பெரிய ஒரு அற்புதமாகும். ஒரு சில நொடிப்பொழுது தாமதமானால் கூட அவர்களை எரித்திருக்கும். பொறாமையாளர்களின் பொறாமை இன்னும் அதிகமாகும். எனவே துஆவின் பக்கமும் கவனம் செலுத்துங்கள். رب کل شیء خادمك رب فاحفظنی وانصرنی وارحمنی என்ற துஆவும் اللهم انا نجعلك فی نحورهم ونعوذبك من شرورهم என்ற துஆவையும் செய்யுங்கள்.

மேலும் ربنا اٰتنا فی الدنیا حسنة وفی الاخرة حسنة وقنا عذاب النار என்ற துஆவையும் செய்ய வேண்டும்.

இது உண்மையிலேயே நம்முடைய தகுதியற்ற தன்மையினாலும் பலவீனத்தினாலும் ஏற்பட்டிருந்தால் அதிகமாக இஸ்திக்ஃபாரும் செய்ய வேண்டிய தேவை உள்ளது. அல்லாஹ் இனிமேலும் நம்முடைய பொறுப்புகளை சரியான முறையில் நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. மேலும் இந்த பலகீனங்களை நீக்குவானாக. இது சோதனையாக இருக்குமென்றால் அல்லாஹ் நம்மை இதையும் வெற்றிகரமாக கடக்கச் செய்வானாக. மேலும் தன்னுடைய அருட்களை முன்பை விட அதிகமாக வழங்குவானாக. மேலும் அவன் நற்செய்தி வழங்குகின்ற அந்த பொறுமையாளர்களோடு நம்மையும் சேர்ப்பானாக. நாம் முன்பை விட அதிகமாக முன்னேற்றங்களை பார்ப்போமாக.

தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் இரு ஜனாஸா காயிப் தொழுகைகளை தொழ வைத்தார்கள். முதலாவதாக காதியானைச் சார்ந்த மதிப்பிற்குரிய சவுத்ரி மஹ்மூது அஹ்மது சாஹிப் முபஷ்ஷிர் தர்வேஷ் மர்ஹூம் அவர்களுடையதாகும். 18 செப்டம்பர் அன்று ஏறக்குறைய 97 வயதில் காதியானில் வஃபாத் ஆனார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْنَ

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய சிரியாவை சார்ந்த காலித் சலீம் அப்பாஸ் அபு ராஸி சாஹிப் அவர்களுடையதாகும். 27 ஆகஸ்ட் 2015 அன்று இதயத் துடிப்பு நின்ற காரணத்தினால் வஃபாத் ஆனார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْنَ